பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

நல்லூர் பிர... யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 08 திங்கட்கிழமை (22-06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 207

# தீர்வுக்கான யோசனையை தெரிவுக்குழு எட்டுவது கஷ்டம்!

## சிங்கள - தமிழ்க் கட்சிகளிடையே இணக்கம் காணமுடியாத நிலை

கொழும்பு, ஜூன் 22

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் இணக்கமான யோசனை ஒன்றை எட்டுவது என்பது முடியாத காரியம்.

குழுவில் அங்கம் வகிக்கும் சிங்கள — தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்து வருவதால் அக்கட்சிகளினால் இணக்கமான யோசனை ஒன்றை முன்வைக்க முடியாது.

— இவ்வாறு கொழும்பில் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

தெரிவுக்குழு அமைக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையை அடைந்துள்ள போதிலும், இன்னும் தீர்வுக்கான யோசனை ஒன்றை எட்டும் அடிப்படை நிலைக்குக்கூட தெரிவுக்குழு நடவடிக்கைகள் நகரவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

வடக்கு, கிழக்குக்குத் தனித்தனியான மாகாணக் குழுக்களும், அவை சேர்ந்து கூட்டுக் குழுவும் [Apex Council] அமைக்கும் திட்டம் ஒன்று சிங்களக் கட்சிகளினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு - கிழக்கு இணைக்கப்படாத இந்த யோசனையை ஏற்கப்போவதில்லை என்று எல்லாத் தமிழ்க் கட்சிகளும் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

வட. - கிழக்கு இணைப்பை வலியுறுத்தும் நான்கம்ச யோசனை ஒன்றை இலங்கை தொழிலாளர் காங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - பாக். யுத்தம் அடுத்த மாதம் வெடிக்கும்!

### பென்டகனுக்கு எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூன் 22

"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அடுத்த மாதத்தில் பெரும் போர் வெடிக்கும். அந்தப் போரில் அணுகுண்டு மற்றும் இரசாயன ஆயுதங்கள் தாராளமாகப் பாவிக்கப்படும். இதனால் இப்பிராந்தியத்தில் பேரழிவு ஏற்படும்."

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனுக்கு [Pentagon] தேசிய உளவுத்துறை அலுவலகம் இவ்வாறு அவசர எச்சரிக்கைச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

உலக நிலைமையை 24 மணி நேரமும் கண்காணித்து, முக்கிய நிகழ்ச்சிகளை அமெரிக்க ஜனாதிபதிக்கும், அமெரிக்க பாதுகாப்புச் செயலாளருக்கும் [அமைச்சருக்கும்] அவ்வப்போது தெரிவித்து வருவது

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர் தெரிவு பரீட்சை 11 இல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஆரம்ப ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

கடந்த 20 ஆம் திகதி நடைபெறவிருந்த இந்தப் பரீட்சை பின்போடப்பட்டிருந்தது தெரிந்ததே. [ஓ-3]

## சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 22

மட்டக்களப்பு மண்டூரில் கடந்த வெள்ளிக்கிழமை தேச விரோத குழுக்களால் சோமசுந்தரம் என்ற பொது மகன் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## வெடி விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப்பகுதியில் காணப்பட்ட 'அருள் - 89' ஷெல்லை கழற்றிப்பார்க்க முற்பட்டசமயம் அது வெடித்ததில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

சிவகுமார் [16 வயது - களுச்சங்கேணி], ரவி [14 வயது - தண்ணீரூற்று] ஆகியோரே காயமடைந்தவர்களாவர். [உ]

## மட்டக்களப்பு காரைதீவில்

## பிள்ளையார் ஆலயத்தில் புத்தர் சிலை பிரதிஷ்டை!

### அதிரடிப்படையின் அத்துமீறல்

மட்டக்களப்பு, ஜூன் 22

மட்டக்களப்பு, காரைதீவு பிரதான சந்தியில் அமைந்துள்ள அரசடிப்பிள்ளையார் ஆலயத்தில் புத்தரின் சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள விசேட அதிரடிப் படையினரே இந்தச் சிலையை வைத்திருக்கின்றனர்.

முகாம் அதிகாரியான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அஜித் விக்கிரமசேகர சிலையைத் திறந்து வைத்தார். அதிரடிப் படையினரும், பிக்குகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (உ-3)

## ஆயுத முனையில்

## மட்டு. ரயில் வழிமறிப்பு! இருவர் கடத்தப்பட்டனர்!!

கடந்த வியாழக்கிழமை நண்பகல் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயில் சத்துருக்கொண்டானில் வைத்து ஆயுதம் தாங்கிய இளைஞர் குழு ஒன்றினால் வழிமறிக்கப்பட்டது. ரயிலில் பிரயாணம் செய்த இருவர் கடத்திச் செல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு பொலீஸார் இத்தகவலை வெளியிட்டனர்.

அந்த ரயிலில் பாதுகாப்பு படையினரும் பயணம் செய்தனர் என்றும் — என்றாலும் ரயிலை வழிமறித்த குழுவினர் படையினருக்கு எதுவித தீங்கையும் விளைவிக்க முயலவில்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர். [த-3]

## கிளிநொச்சி மாவட்டத்தில் 50 வீத ஆசிரியர்கள் மட்டுமே

### கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களில் ஐம்பது சத வீதத்தினர் மட்டுமே பணிபுரிகின்றனர். கணித, விஞ்ஞான ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை மிகமோசமான நிலையை அடைந்துள்ளது.

கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை புரிய ஆயிரத்து 200

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு நாளாந்தம் கூடி விரைந்து தீர்வு காணுமாம்

### அமைச்சர் தொண்டா தகவல்

கொழும்பு, ஜூன் 22

இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழு முயற்சி செய்யும். அடுத்த வாரம் தொடக்கம் அது நாளாந்தம் தனது அமர்வுகளை நடத்தும்.

இத்தகவலை அமைச்சர் தொண்டமான் "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டிஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசியல்வாதிகள் தீவிரம் காட்டவேண்டும் என்றும்—

அதற்காக ஒவ்வொரு நிமிட நேரத்தையும் அரசியல்வாதிகள் தியாகம் செய்யவேண்டும் என்றும் — திரு. தொண்டமான் தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

கட்சிகளின் நலனை விட நாட்டின் நலன்தான் முக்கியம். அரசியல் கட்சிகள் சுய நலத்தைக் கைவிட்டு நாட்

[4ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தமுனைக்கு இடமாற்றம்:

## மேஜர் தாக்கல் செய்த ஆட்சேப வழக்கு தள்ளுபடி!

கொழும்பு, ஜூன் 22

வடக்கு, கிழக்கு யுத்த முனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து இராணுவ அதிகாரி ஒருவர் தாக்கல் செய்த வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மேஜர் எம். விஜேசுந்தர என்ற அதிகாரி தாக்கல் செய்த மனுவே நிராகரிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு தாம் லெப்ரினன்டாக இருந்த போது ஏற்பட்ட முதுகுக் காயம் காரணமாக தாம் யுத்தமுனைக்குச் செல்லமுடியாதிருப்பதாக அவர் தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

அவரது மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், அவரது இடமாற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ஜனாதிபதித் தேர்தல்:

## எதிரணி பொது வேட்பாளர் பேராசிரியர் சுவெல்?

புதுடில்லி, ஜூன் 22

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பேராசிரியர் ஜி. ஜி. சுவெல் என்பவரை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு ஆதரவு பெருகிவருவதாக பாரதிய ஜனதா கட்சி அறிவித்திருக்கிறது.

பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றி ஜனதா தள் மற்றும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி ஆகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இரு ஜீ. சீ. ஈ. [உயர்தர] பரீட்சைகளும் வெவ்வேறானவையாக கருதப்படும்

## நாடாளுமன்றில் அமைச்சர் ஹமீத் அறிக்கை சமர்ப்பித்தார்

கொழும்பு, ஜூன் 22

1990 ஆகஸ்டில் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ (உயர்தரப்) பரீட்சையும், வடக்கு—கிழக்கில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ (உயர்தர) விசேட பரீட்சையும், பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் வெவ்வேறானவையாக கணிக்கப்படும்.

நீதி மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் கட[illegible] மன்றத்தில் இவ்வாறு உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு மாவட்ட எம்.பியும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவருமான தினேஷ் குணவர்த்தனா நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டார். அந்த அறிக்கையில் அமைச்சர் ஹமீத் மேலும் தெரிவித்ததாவது:-

1990 ஆகஸ்ட் பரீட்சை வினாக்கள் போன்ற ஒரே மாதிரியான, எல்லா வகைகளிலும் ஒத்த வினாக்களே (Identical Questions) 1991 ஏப்ரல் பரீட்சைக்கும் வழங்கப்பட்டிருந்ததாக ம.ஐ.முன்னணியின் எம்.பி குறிப்பிட்டிருக்கிறார்.

நான் இந்த விடயத்தை ஆராய்ந்தேன். இரண்டு பரீட்சை வினாக்களிலும் அடிப்படை ஒரே வகையாக இருந்தது. (Similarity in the pattern of Questions)

இத்தகைய நிலை வடக்கு—கிழக்குக்கு வெளியேயிருந்து தோற்றிய மாணவர்களுக்கு பின்னடைவைத் தருவதாக இருக்காதா என்று தினேஷ் குணவர்த்தனா இங்கு கேள்வி எழுப்பினார். எனது கருத்துப்படி இத்தகைய நிலை வடக்கு — கிழக்கு மாணவர்களுக்கு — குறிப்பாக பொறியியல் மற்றும் வர்த்தக மாணவர்களுக்கு — வாய்ப்பாக. (Advantage) அமைந்து விட்டது.

ஆகையினால் —

(i) இந்த இரு பரீட்சை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆறு வாரங்கள் நிரம்பிய வெள்ளைநிற பூச்சி அகற்றிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ''இலக்சுமி வாசா'', இல. 222, தெல்லிப்பழை வீதி, சித்தன் கேணி. (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) [21448]

வீட்டுத் தளபாடங்கள் றேடியோக்கள், தையல் மெஷின், T. V. செரமிக் கிளாஸ் வகைகள், ரைப் றைட்டர், சைக்கிள், ஆர்மோனியம், மிருதங்கம் மற்றும் குசினிக்கு தேவையான பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (21446)

இரும்பு வேலைத்தலத்திற்குரிய ஆயுதங்கள், Singer தையல் மெஷின். வீட்டுத்தளபாடங்கள், லினோலியம், தமிழ்-ஆங்கில தட்டச்சுக்கள், Bottle Coolers, Deep Freezer, Air Conditioner-ஜெயா ஏலவிற்பனைப் பகுதி, டாஸ் கொம்ப்ளெக்ஸ், 163, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [4767]

60 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்ட தகரக் கூரை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரவி ரேடர்ஸ். பழக்கடை, திருநெல்வேலி சந்தி. (4778)

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் சிவப்பு, வெள்ளை, கறுப்பு இன பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. பேடு விலை 45 ரூபா, சேவல் விலை 20 ரூபா. சிங்கம் வீதி, உடுவில், மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, வலது புற சிங்கம் வீதி. [20599]

## திருமண சேவை

உங்களுக்குத் தகுந்த பொருத்தமான மணமக்களை அடையவும், உங்கள் விருப்பம் போல் மனநிறைவுடன் வாழவும் நாடுங்கள். புதிய மாங்கல்யா மஹ்றி சேவிஸ், இல: 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். [21478]

## மணப் பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 34 வயது, லக்கினத்திற் சேதுவுள்ள அரசாங்க உத்தியோகத்தருக்கும், லங்கா சிமெந்து லிமிட்டெட்டில் வேலை செய்பவருக்கும் 42 வயது T.A. க்கும், 31 வயது, புரட்டஸ்தாந்து I A B க்கும் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [21441]

**சிவாகி**

சாவகச்சேரி.

**1992 A/L**

**வினா-விடை மட்டும்**

**ஆரம்பம்:**

**23 - 06 - 1992**

(செவ்வாய்)

பொருளியல்: 2 — 3-30

கணக்கியல்: 3-30 — 5-00

வர்த்தகம்: 5-00 — 6-30

[சி-2695]

## விற்பனையாகின்றன

A/L வினா-விடை [உயர் கல்விப் பதிப்பகம், கொழும்புத்துறை] C.R கொப்பிகள், 5 ஆம் ஆண்டு கட்டுரைத் தேன்துளி 60, China கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [21467]

91 August விசேடம் 92 விஞ்ஞான பாடங்களின் விடைகள் விற்பனையில். "A" Level Centre, 1 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-2698]

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.**

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க / அரச கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழிலில் (விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தையும், மேலதிக விவரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் 15/- ரூபாவை செலுத்திப் பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது/ சுய விலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ x10 செ. மீ. அளவினதான கடிதமேலுறையுடன் உதவிப் பதிவாளர் தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 31-07-92

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத் தேர்வு ஒன்றுக்கூடாகவும், நேர்முகத்தேர்வு ஒன்றுக் கூடாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத்தேர்வு 20 09-1992 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

குறிப்பு:

பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

— பதிவாளர்.

[சி-21361

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

**யாழ். இந்துக் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

இடம்: குமாரசாமி மண்டபம்

திகதி: 1992 — 06 — 28 (ஞாயிறு)

நிகழ்ச்சிநிரல்:

காலை 8-30 — 9 00 ஞானவைரவ சுவாமி வழிபாடு.

காலை 9-00 — 10-00 அயுட்கால அங்கத்துவ அட்டை விநியோகம்.

காலை 10-00 — 10-30 தேநீர்.

காலை 10-30 — 12-30 கூட்டம்.

பி. ப. 12-30 — 1-30 மதிய உணவு.

பி. ப. 1-30 — 4-30 மென்பந்து துடுப்பாட்டம்

மாலை 4-30 — அதிபரின் தேநீர் விருந்து.

உறுப்பினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுந்தரம் டிவகலாலா, செயலர்.

யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். [சி-2140]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உயிர்ப்பு: 16 — 02 — 1932

அழிப்பு: 22 — 06 — 1989

அமரர்

**சிறில் பிரான்சிஸ் சுவாம்பிள்ளை**

[முன்னாள் வின்ஸர் படமாளிகை முகாமையாளர்]

பேசரிய நல்லொழுக்கம் பெறுவதே பேறு
ஆசிரியனாதல் அதில் நன்று — வீசுலகில்
பிரிந்தார் எமைவிட்டு பிரான்சிஸ் சுவாம்பிள்ளை
இருந்தார் எம்நெஞ்சில் என்றும்!
அணையில்லா ஊற்றென்று அதுதான் அன்பென்று
இணையுமோர் நட்பால் எம்முன்ளே — கணைபோலும்
தொடுத்தாய் கரவிலாது நெஞ்சை என்நெஞ்சுள்
விடுத்தெங்கே சென்றாய் விரைந்து!

இவரின் பிரிவால் துயருறும்;
நண்பன்
மி. யேசுதாஸன்.
[யேசுக்குட்டி]

192, பாங்ஷால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம். [சி-2134]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 30 — 08 — 1911

மறைவு: 23 — 05 — 1992

அமரர் பண்டிதர்

**பி. எஸ். ஞானப்பிரகாசம்**

[இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து, எங்கள் குடும்ப ஒளி விளக்காய் எம்மை வழி நடத்தி, மீளாத் துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கன்டி வீதி, மிருசுவில். [21474]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை தலைமையகம்

### ஆரம்ப சுகாதார கவனிப்பு உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமை, சுகாதாரப் போதனாசிரியர் அனுபவம், ஆற்றல், ஆர்வம், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோர் 02-07-1992க்கு முன் விண்ணப்பிக்கவும். 04-07-1992 காலை 10-00மணிக்கு நேர்முகப் பரீட்சை பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டா.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
19 06-1992. [சி-2139]

# மரண அறிவித்தல்கள்

## அ. பீற்றர் இராசநாயகம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட பீற்றர் இராசநாயகம் காலமானார். இவர் லீலாவதி (தாதியர், யாழ். போதனா வைத்தியசாலை) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை. சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், அந்தோனி, பூரணமரியை ஆகியோரின் அன்பு மகனும் வேதநாயகம், செல்வநாயகம், அரியநாயகம், துரைநாயகம், திருமதி சுப்பிரமணியம், திருமதி விஜயராஜா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-06-1992) திங்கட்கிழமை மாலை 3மணிக்கு 205/1, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லீலாவதி [மனைவி]

205/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [21483]

## திருமதி மயில்வாகனம் தங்கம்மா

சரவணை மேற்கைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் தங்கம்மா 21 - 6 - 92 இல் சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற நாகேந்திரர் மயிலவாகனத்தின் அன்பு மனைவியும், திருமதி பரமேஸ்வரி, சந்திரவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் க. திருக்கந்தராசாவின் மாமியாரும், காலஞ்சென்ற திருமதி சுப்பிரமணியம் பொன்னம்மாவின் சகோதரியும், காலஞ்சென்ற பூங்காவனம் மற்றும் கனகம்மா, நாச்சியார் ஆகியோரின் மைத்துனியும் பிறேமா, தேன்மொழி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22 - 6 - 92 [இன்று] திங்கட்கிழமை காலை 9. 30 மணியளவில் பிள்ளையார் விலாஸ் கட்டடத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. மு. நாகராசா

பிள்ளையார் விலாஸ்,
இல 33, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [21484]

## செல்வி இந்திராவதி மனுவேல்பிள்ளை

யாழ்ப்பாணம் 21, ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த செல்வி இந்திராவதி மனுவேல்பிள்ளை 20-6-92 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி மனுவேல்பிள்ளை - திருமதி அக்னேஸ் மனுவேல்பிள்ளை ஆகியோரின் மகளும் வில்பிறெட், லீலாவதி, இராசசிங்கம், அல்பேட்துரைசிங்கம், பத்மாவதி, சந்திராவதி [ஆசிரியை, கொழும்பு] ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று பி. ப. 4 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
அக்னேஸ் மனுவேல்பிள்ளை

21, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். [21485]

## திருமதி மகேஸ்வரி கனகசபை

சரசாலை மத்தியைச் சேர்ந்தவரும், கொழும்பு றோயல் கல்லூரி முன்னாள் ஆசிரியருமான காலஞ்சென்ற சீ. கனகசபையின் அன்பு மனைவியும், அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவி கலைவாணியின் அன்புத் தாயாருமான மகேஸ்வரி இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அவரது ஈமக்கிரியைகள் 17-6-92 சிதம்பரத்தில் நடைபெற்றன என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல் :
க. சிவகுருநாதன்

[21482]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நியாயமான அச்சமே!

மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியின் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தனாவுக்குத் திடீரென ஓர் அச்சம் பிறந்திருக்கிறது. உண்மையிலேயே அது நியாயமான ஆதங்கம் தான். நிச்சயமாக வரவேண்டிய அச்சமும் கூட!

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை அரசாங்கம் மேலும் தாமதம் செய்யுமானால் எமது உள்நாட்டு விவகாரத்தில் வெளிநாட்டுச் சக்திகள் தலையிடுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். — இதுவே தினேஷ் வெளியிட்டிருக்கும் அச்சம்.

தமிழர் பிரச்சினையை ஒரு தேசிய விவகாரமாகக் கருதி, அதற்கு முன்னுரிமை கொடுத்துத் தீர்த்து வைக்க வேண்டும் என்று கடந்த பல தசாப்தங்களாக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் சிங்களத் தலைவர்கள் பேசி வருவது சர்வ சாதாரணம்.

ஆனால் செயலளவில், நடைமுறையில் ..... சுன்னத்துக்கு மேல் சுன்னம்!

மிகக் குறிப்பாக இனப்பிரச்சினை, நியாயமானமுறையில், தமிழர்களின் அடிமைத்தனத்தை நீக்கும் வகையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதில் தெற்கின் பிரதான கட்சிகளான ஐ. தே. கவும், ஸ்ரீ. ல. சு. கவும் இன்னும் கருத்திணக்கத்துக்கு வராமல் ஒன்றை மற்றது குற்றஞ்சாட்டியும், குழப்பியும் வருகின்றன!

இனப்பிரச்சினை காரணமாக தமிழர்களின் இரத்தம் மட்டும் சிந்தவில்லை. சிங்களவர்களின் இரத்தமும் நாளாந்தம் சிந்தப்படுகிறது. கடந்த நான்கு வருடங்களில் மட்டும் சிங்கள அரச படையினர் 6,690 பேர் மடிந்தார்கள் என்பது புள்ளி விவரம்.

எனினும் சிங்கள அரசியல்வாதிகள் இது குறித்துப் பொருட்படுத்துவதாக, கவலைப்படுவதாக இல்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் இவ்வேளையில் கூட தமிழர்களின் நலன்களைப் பேணத்தக்க எந்தத் தீர்வையும் முன்வைக்க அவர்களது மனம் ஒப்பவில்லையே!

தமிழர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் வெளிநாடுகள் தலையிட முடியாது; தலையிடக்கூடாது என்ற நிலைப்பாட்டுடன் சிங்களத் தலைவர்கள் செயற்படுகிறார்கள். ஓர் இனத்தைத் தொடர்ந்து கொன்றொழித்துக் கொண்டிருப்பதை உலகம் கைகட்டி, வாய்பொத்திப் பார்த்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

எதற்கும் ஓர் எல்லையுண்டு. அடக்குமுறையும், அத்துமீறலும் எல்லை கடந்தால் அக்கிரமம் மேலோங்கினால் அவற்றை அடக்கித் தர்மத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதற்கு ஒரு சக்தி உருவாகும்.

இன்றைய உலகப் போக்கில் அந்தச் சக்தி வெளிநாடுகளாக இருக்கும் என்பதை சிங்களத் தலைவர்களில் தினேஷ் ஆவது புரிந்து கொண்டாரே!

தமிழர்களைப் பொறுத்தவரையில் வெளிநாடு எதுவும் ஆக்கிரமிப்புச் செய்வதையோ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதையோ அவர்கள் விரும்பவில்லை; அனுமதிக்கவும் மாட்டார்கள். ஆனால் நண்பர்களாக வந்து தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டும் விதத்தில் பிரச்சினையைத் தீர்க்க முன்வந்தால் அதனை வரவேற்பார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

---

தமிழ்க் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு

# தீர்வு தேடி இந்தியாவுக்கு செல்லும் நிலை மாறிவிட்டது

### அமைச்சர் ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 22

தமிழ்க்கட்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேடி இந்தியாவுக்குச் செல்லும் காலம் மலையேறி விட்டது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

கடந்த வாரம் நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார். அவர் அங்கு மேலும் குறிப்பிட்டதாவது:-

யுத்தம் இடம்பெறும் போது சில குடிமக்களும் கொல்லப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கருத்துடன்பாடுடனான யோசனையை அரசு ஆர்வமாக எதிர்பார்த்துள்ளது.

தமிழர் கட்சிகளும் தெரிவுக்குழுவின் முடிவை எதிர்பார்த்துள்ளன. இதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், தமிழர் கட்சிகள் தீர்வுக்கு இலங்கையையே எதிர்பார்க்கின்றனர். வெளிநாடுகளை எதிர்பார்க்கவில்லை. தீர்வை இலங்கைக்குள்ளே காணும்படி இந்தியா கூட கூறி விட்டது. அடுத்த ஒரு மாதத்தில் தெரிவுக் குழுவின் வெற்றியை நாம் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கையைத் தமிழ்க் கட்சிகள் இன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சந்தர்ப்பத்தை நாம் தவற விட்டுவிடக் கூடாது.

1980 ஆரம்பத்தில் இருந்து தமிழ்க்கட்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேடி இந்தியா சென்றன. இப்போது நிலைமை மாறி விட்டது — என்றார். [உ-எ]

---

எம். பிக்கள் பேசும்

## ஒவ்வொரு வார்த்தைக்கும் 50 சதம் செலவாகிறது!

### பிரதிச் சபாநாயகர் தகவல்

கொழும்பு, ஜூன் 22

நாடாளுமன்றத்தில உறுப்பினர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையினாலும் அரசாங்கத்துக்கு ஐம்பது சதம் செலவாகின்றது.

உப சபாநாயகர் காமினி பொன்சேகா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தை ஒவ்வொரு மாதமும் மணித்தியாலக் கணக்காக நடத்தத்தான் வேண்டுமா? இவ்விவாதத்தை நான்கு மணித்தியாலத்துக்குள் நடத்தி முடித்து அரசின் செலவீனத்தைத் தவிர்க்கக் கூடாதா? — இவ்வாறு திரு. காமினி பொன்சேகா அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் கேள்வி எழுப்பினார். அச்சமயம் சபைக்கு சபாநாயகர் முஹம்மது தலைமை வகித்தார். (உ-எ)

---

கொலை வழக்கை அவதானிக்க

## சர்வதேச அவதானிகள் குழு இலங்கை வந்துள்ளது!

கொழும்பு, ஜூன் 22

கொலை வழக்கு ஒன்றின் விசாரணையை அவதானிப்பதற்கு சர்வதேச அவதானிகள் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

அனுராதபுரம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுவரும் எப்பாவெல கொலை வழக்கு விசாரணையை இக்குழு தற்சமயம் அவதானித்து வருகின்றது.

இக்குழுவில் செல்வி பிரான்ஸிஸ் கல்மன், செல்வி மரிலின் கிறிற்ஸர், திரு. பீற்றர் மைக்கல்சன் ஆகியோர் உள்ளனர்.

இவ்வழக்கில் செல்வி சி. சந்திரவதி என்பவரைக் கடத்திச் சென்று கொலை செய்ததாக எப்பாவெல பொலீஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் பண்டார, கான்ஸ்டபிள் ரவீந்திரா சம்பத் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. [த-எ]

---

# தெரிவுக்குழுவிடம் தொண்டா கடந்த வாரம் மற்றொரு யோசனை

கொழும்பு, ஜூன் 22

இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் அமைச்சர் தொண்டமான் மற்றுமொரு தீர்வுத் திட்டத்தினைச் சமர்ப்பித்துள்ளார்.

எட்டுத் தமிழ்க் கட்சிகளின் கூட்டுத்திட்டமாக இப்புதிய யோசனை இம்மாதம் பதினேழாம் திகதி அமைச்சர் தொண்டமானால் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் வெளியிட்ட அறிக்கையில் இருந்து இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது.

இது சம்பந்தமாக திரு. பொன்னம்பலம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

எட்டுத்தமிழ் [illegible] கட்சிகள் இனப்பிரச்சினை[illegible] தீர்வு விவகாரத்தில் ஒன்றுபட்ட நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைப்பாட்டினை இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் கடந்த 17ஆம் திகதி தெரிவுக்குழு முன் சமர்ப்பித்துள்ளார். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தீர்வு வந்தால் மட்டுமே எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியும்.

தமிழ்க் கட்சிகளின் பரிசிலனைக்காக "கொள்கை விளக்க நகல் பத்திரம்" ஒன்று சில யோசனைகளுடன் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் அடங்கியுள்ள யோசனைகள் தமிழ்க் கட்சிகளினால் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ள முடியாதவையாகவே இருக்கின்றன. அதனைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை.

இனப் பிரச்சினைக்கு அர[illegible] துடன் முடித்துக் கொள்ளவே தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றன.

தீர்வு காணும் இந்தப் பணியில் தோல்வி ஏற்படுமானால் என்ன செய்வது என்பதையிட்டு, தமிழ் பிரதிநிதிகள் இப்பொழுது இருந்தே சிந்திக்க தலைப்பட வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

### கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

நல்லின கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் இனவிருத்தி செய்யப்பட்ட நல்லின கால்நடைகளைப் பெற்று, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்குவதற்கான திட்டம் ஒன்றை யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது. (த)

---

### சாத்தியக்கூறு இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 22

மாதம் இரு தடவை தபால் பொதிகளை கொழும்பில் இருந்து எடுத்து வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாதம் ஒரு தடவையே கப்பல் யாழ்ப்பாணம் வருவதாலும்—

காங்கேசன்துறைக்கு வாகன அணி செல்வது முற்றாகத் தடைப்பட்டதாலும்— இந்நிலை எழுந்துள்ளதாக அவர் தெரிவித்தார். [த-3]

---

## மீன்பிடித்துறை அமைச்சுக்கு ஹெலியில் தான் போகலாம்

### சுதந்திரக் கட்சி எம். பி. சாடுகிறார்

கொழும்பு, ஜூன் 22

மீன்பிடித்துறை அமைச்சுக்குச் செல்ல வேண்டுமானால் இன்று ஹெலிக் கொப்டரில் தான் அங்கு செல்ல முடியும்.

— இவ்வாறு கூறினார் கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

நீர்கொழும்பில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசியபோதே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மீனவர்கள் அதிகமாக வாழ்வது சிலாபம், நீர்கொழும்பு மற்றும் தென்மாவட்டங்களில்தான். ஆனால் மீன்பிடித்துறை அமைச்சு திருகோணமலையில் நிறுவப்பட்டுள்ளது. அங்கு மீனவர்கள் செல்ல முடியாது. அமைச்சர் கூட அங்கு செல்வதானால் ஹெலிக் கொப்டரில் தான் செல்ல முடியும்.

இந்நிலையில் மீனவர்களின் பிரச்சினைகளை அவர் எவ்வாறு தீர்த்து வைக்க முடியும்? — என்றார். (த-10)

### பொலீஸார் வேலை நிறுத்தம்?

பொலீஸ் அதிகாரிகளின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளன. இராணுவ அதிகாரிகளின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக பொலீஸார் விரைவில் நாடு முழுவதிலும் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள ஆயத்தம் செய்கிறார்கள்.

— இவ்வாறு திருகோணமலை மாவட்ட சுதந்திரக் கட்சி எம் பியான எம். கே. ஏ. டீ. எஸ் குணவர்த்தனா நாடாளுமன்றத்தில் கடந்த வியாழனன்று உரையாற்றுகையில் தெரிவித்தார். [த-10]

---

கைதானவர் காணாமல் போனார்;

## ஐந்து பொலீஸ்காரர்கள் தற்காலிக வேலை நீக்கம்

கொழும்பு, ஜூன் 22

திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் காணாமற் போன சம்பவம் தொடர்பாக உரகஹா பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலீஸ்காரர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டுத் தொடர்பாக காணாமற்போன சந்தேக நபரான சுனித்டி சொய்சா உட்பட நால்வர் கைது செய்யப்பட்டதாகவும் —

அவர்களில் மூவர் காலிச் சிறைக்கு அனுப்பப்பட்டனர் என்றும் —

உரகஹா பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டிசொய்சா அங்கு வைத்துத் தாக்கப்பட்டார் என்றும் சந்தேக நபர்களில் ஒருவரான மஹிந்தா வாக்குமூலமளித்ததைத் தொடர்ந்து 5 பொலீஸாரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த-எ]

### வீஸா இன்றி இலங்கை வர அனுமதி

கொழும்பு, ஜூன் 22

வீஸா இன்றி இலங்கை வருவதற்கு மேலும் இருபத்தியேழு நாடுகளின் பிரஜைகளுக்கு கொழும்பு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சைப்பிரஸ், துருக்கி, ஹங்கேரி, கிரீஸ், செக்கோஸ்லோவேகியா, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா, குரோஷியா, ஸ்லோவேனியா, பொஸ்னியா, யூகோஸ்லேவியா சமஷ்டி அரசு, முன்னாள் சோவியத் யூனியனில் பிரிந்து கொமன்வெல்த் சுதந்திரக் குடியரசுகள் என்ற அமைப்பில் அங்கம் வகிக்கும் 15 நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரஜைகளே வீஸா இன்றி வர இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது. (த-எ)

### ஒருலட்சம் பவுண் தேவையாம்!

லண்டன், ஜூன் 22

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ, சுமார் ஒரு லட்சம் பவுணுக்கும் அதிகமான பணம் தேவைப்படுவதாக ஜெனீவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்திருக்கிறது. [த-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுழமுனை பாடசாலையும் குண்டு வீச்சுக்கு இலக்கானது

குமுழமுனைப் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது குமுழமுனை மகாவித்தியாலயத்தை இலக்கு வைத்தும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பொம்மர்கள் வீசிய நான்கு குண்டுகள் மகாவித்தியாலயத்தின் விளையாட்டுத் திடலில் விழுந்து வெடித்துள்ளன. இதனால் மகாவித்தியாலய கட்டடமும், ஆய்வு கூடமும் சேதமடைந்ததாகத் தெரியவருகிறது.

அப்பகுதியில் இருந்த கிணறு ஒன்றும் பலத்த சேதமடைந்தது. [த-5-126]

# முதலாம் ஆண்டு வகுப்புக்கு அனுமதி முறையில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 22

அரசாங்க பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிக்கும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து கல்வி சம்பந்தமான நாடாளுமன்ற ஆலோசனைக் குழு ஆலோசித்து வருகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இது அமுலுக்கு வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அனுமதியின் போது நிரந்தர வதிவிட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 35 வீத இடங்களை 15வீதத்தால் அதிகரிக்க இக்குழு உத்தேசித்துள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வேளை நிரந்தர வதிவிடமில்லாதவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு வீத இடத்தை ஆறு வீதமாக அதிகரிக்கவும் ஆலோசிக்கப்படுகிறது.

பாடசாலையில் ஏற்கனவே உள்ள மாணவரின் உறவினர்களுக்கு வழங்கப்படும் 25சத வீத இடத்தை 10 சத வீதத்தால் குறைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [த]

## வடபகுதி யுத்தம் குறித்து

# பொதுமக்களுக்கு எதுவுமே தெரிவிக்கப்படுவதில்லை

## சபையில் லக்ஷ்மன் ஜெயக்கொடி

கொழும்பு, ஜூன் 22

பலமான இராணுவ நடவடிக்கை வட பகுதியில் எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் பொதுமக்களுக்கு இது தொடர்பாக ஒன்றுமே தெரிவிக்கப்படுவதில்லை.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்க வகை செய்யும் பிரேரணை அண்மையில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது சுதந்திரக்கட்சி எம்பி லக்ஷ்மன் ஜெயக்கொடி மேற்கண்டவாறு கூறினார்.

லக்ஷ்மன் ஜெயக்கொடி:- வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி பிரேமதாஸா தனது மனதில் வைத்துள்ள இரகசியத் திட்டம் என்ன என்பதை நாடு அறிய விரும்புகிறது. இணைப்பு விஷயம் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன?

டாக்டர் விமல் விக்கிரமசிங்கா [ஐ.தே.க]:- அது எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளது.

திரு. ஜெயக்கொடி:- விடுதலைப் புலிகளுடன் இரகசியமாக, மறைமுகமாக பேச்சுக்கள் நடத்தப்படுவதாகத் தகவல் தெரிவிக்கிறது. இந்திய — இலங்கை உடன்படிக்கை அரசாங்கத்தை இன்னும் கட்டுப்படுத்துகிறதா?

வடக்கு — கிழக்கில் உடனடியாக சண்டை நிறுத்தத்தைக் கொண்டு வரும்படி தொண்டமானும். ஏனையோரும் கோரியிருப்பதாகக் கூறப்படுவது சரியா?

வட பகுதியில் அரச துருப்புகளினால் கைப்பற்றப்பட்ட பகுதிகளின் விஸ்தீரணம் என்ன?

துருப்புக்களின் முன்னேற்றம், கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை, போர் முனையில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் பொதுமக்களிடமிருந்து மறைக்கப்படக்கூடாது.

டாக்டர் விமல் விக்கிரமசிங்கா: விளம்பரம் செய்யச் சொல்லி எம்மைக் கோருகிறீர்களா?

ஜெயக்கொடி: மலையகத்துக்கு, பல வழிகளாலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. [இ-எ]

## இந்திய - பாக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உளவுத்துறை அலுவலகமே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலகம் இந்திய - பாகிஸ்தான் பிராந்தியத்தில் யுத்த மேகங்கள் சூழ்ந்து வருவது பற்றிய அவசர இரகசிய அறிக்கை ஒன்றை அமெரிக்காவின் முக்கிய இராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

அந்த இரகசிய அறிக்கையின் சில பகுதிகளை ''விமானப் படையின் உள்ளே'' [''Inside the Airforce''] என்ற இராணுவ சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது. அதில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது:-

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காலம் காலமாக இருந்து வந்த மோதல்நிலை காஷ்மீர் மற்றும் பிரச்சினைகளால் இப்போது மேலும் மோசமடைந்திருக்கிறது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதுவதற்காக தலைதெறிக்க ஓடிவந்து கொண்டிருக்கின்றன.

நிகழ்ச்சிப் போக்குகளை வைத்துப் பார்க்கும் போது விரைவில் ஒரு மோதல் வெடிக்கும். அந்த மோதல் எப்போது ஆரம்பிக்கும் என்பதுதான் இப்போதுள்ள கேள்வியாகும்.

யுத்தம் வெடித்தால் அதில் உடனடியாகத் தலையிடுவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கவேண்டும்.

குவைத் மீது ஈராக் படையெடுத்த போது அந்த விடயத்தில் தலையிட நீண்ட காலம் அமெரிக்கா காத்திருந்தது.

அந்த மாதிரி இந்திய — பாகிஸ்தான் யுத்தத்தில் தலையிட அமெரிக்கா தாமதித்தால் அது பேரழிவுக்கு வழிவகுத்துவிடும். அத்துடன் ''சுதந்திர உலகின் தலைவன்'' என்ற அந்தஸ்தையும் அமெரிக்கா இழக்க நேரிடும்.

— இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்துக்கள் மீதான கொடுமைகளை உலகுக்கு அம்பலப்படுத்துங்கள்!

## அத்வானியிடம் யாழ். பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

இலங்கையில் இந்துக்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளை அம்பலப்படுத்த இந்திய நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவேண்டும்.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை இந்திய எதிர்க்கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானியிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் இந்துக்களுக்கும், ஆலயங்களுக்கும் எதிராக இராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள கொடுமைகளை விளக்கி நீண்ட கடிதம் ஒன்றை இந்து சமயப் பேரவை திரு அத்வானிக்கு அனுப்பியுள்ளது.

பேரவை திரு. அத்வானிக்கு முன்னர் அனுப்பிய கடிதம் ஒன்றுக்கு அவர் பதில் எழுதியுள்ளார். அந்தப் பதிலுக்குத் தொடராக பேரவை இம்மாதம் 5 ஆம் திகதி அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''சிவபூமி'' என அழைக்கப்பட்ட இலங்கையில் இந்து மதம் அழிந்து விடுமோ என்று நாம் அஞ்சுகிறோம். உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்களின் பாதுகாவலர் என்ற முறையில் தாங்களும், தங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கை இந்துக்கள் மீதான இக்கொடுமைகளை அம்பலப்படுத்தி, இந்தியாவிலும், உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்களுக்கு எமது அவல நிலையை எடுத்துக் கூறி பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்— என்பதாகும். (அ-3)

## இன்று

கொழும்புத்துறை ஜூன் 22

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் 122 ஆவது ஆண்டு நிறைவு விழா கல்லூரி மண்டபத்தில் — விபுலானந்தர் அரங்கில் — இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக அகில இலங்கைக் கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் கலந்து கொள்வார்.

யாழ். கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தங்கராஜா, யாழ் இந்து அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் —

விடுதலைப் புலிகளின் அரியாலைப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சீராளன் கௌரவ விருந்தினராகவும் பங்குபற்றுவார்.

வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் திரு. கு. குருநாதபிள்ளை நிறுவனர் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (உ-த-30)

★ ★ ★

மானிப்பாய், ஜூன் 22

சுதுமலை சின்மயா பாரதி வித்தியாலயாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். மருதனார் மடம் கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-90)

## உற்சவம்

தென்மராட்சி, ஜூன் 22

சாவகச்சேரி கச்சாய் வீதி ஞானவீரபத்திரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (த-117)

## மேஜர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றத்தை இடைநிறுத்தி இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை விடுத்திருந்தது

மேற்படி அதிகாரியை சோதனை செய்த இராணுவ டாக்டர், அவர் யுத்தமுனைக்குச் செல்ல தகுதியான நிலையில் இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை அடுத்து மேஜர் விஜேசுந்தரான் மனுவை நீதிமன்றம் நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியது.

மேஜர் விஜேசுந்தர உண்மையில உடல் சுகயீனமுற்றவராக இருந்திருந்தால் லெப்டினன்ட் தரத்தில் இருந்து மேஜர் தரம் வரை அவருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டது எங்ஙனம் என்று நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

## எதிரணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யன கலந்து கொண்ட கூட்டம் ஒன்று நேற்று நடந்தது.

முன்னாள் பிரதமர் வி. பி. சிங், என். ரி. ராமராவ், எஸ். ஆர். பொம்மை, மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இன்று [திங்கள்] வெளியிடப்பட இருக்கிறது.

இது இவ்வாறிருக்க இந்திய நாடாளுமன்றம், ராஜ்யசபை மற்றும் மாநிலங்களில உள்ள சட்டசபைகள் ஆகியவற்றில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் ஜனாதிபதித் தேர்தலில் அந்த வேட்பாளர் வெற்றிபெற அதிக வாய்ப்புகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை—

பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக ஜனதா தள் கட்சிக்கும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குமிடையே நிலவும் வேறுபாடுகள் நேற்றிரவு வரை தீர்க்கப்படவில்லை என்று பி.ரி.ஐ செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## இரு ஜி. சீ. ஈ

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் பல்கலைக்கழக அனுமதியைப் பொறுத்த விடயத்தில் வெவ்வேறானவையாகக் கருதப்பட வேண்டும்.

(ii) குறிப்பிட்ட இரு மாவட்டங்களிலும் கடந்த வருட அனுமதி மட்டம் பேணப்பட வேண்டும்.

— என்று முடிவு செய்துள்ளேன்.

### இனிமேல் விசேட பரீட்சை நடக்காது

வடக்கு, கிழக்குக்கு என இனி எதிர்காலத்தில் விசேட பரீட்சை எதுவும் நடத்தப்பட மாட்டாது.

உண்மையான பாரபட்சமற்ற தன்மையும் சரிசமமான வாய்ப்பு அளித்தலும் பரீட்சைகளை வழிநடத்தும் விடயங்களாக இருக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

முதல் பரீட்சைக்கு அல்லது இரண்டாவது பரீட்சைக்குத் தோற்றியதனால் தான் பாதிக்கப்பட்டிருப்பதாக எந்த மாணவனும் கருதுவதற்கு இப்போது இடமில்லை.

அமைச்சர் என்ற முறையில் எனது பொறுப்புக்களையும், கடமைகளையும் நான் நிறைவேற்றும் போது அதனை சாதி, இன, மத, பிராந்திய வேறுபாடுகள் வழிநடத்துவதில்லை — என்று அமைச்சர் ஹமீத் குறிப்பிட்டார்.

1990 ஆம் ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கு 1990 ஆகஸ்ட் பரீட்சையையும், 1991 ஏப்ரல் விசேட பரீட்சையையும் தனித்தனியாகக் கருதுவது என உயர்கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதாகவும்,—

இது குறித்து அமைச்சர் ஹமீத் நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையை வெளியிடுவார் என்றும் —

இம்மாதம் 15ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே. (அ-உ)

## தெரிவுக்குழு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டின் நன்மையைக் கருத்திற்கொண்டு தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும்—

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட தமிழர் நலன் காக்கும் எட்டுக் கட்சிகள் உள்ளன அவர்கள் அனைவரும் ஒரே அணியில் நின்று குழு ஒன்றை அமைத்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒப்புக்கொண்டுள்ளன, சிங்களக் கட்சிகளும் இதற்கு ஒப்புக்கொண்டால் இவ்வாண்டின் இறுதியில் இருந்து நாட்டில் அமைதி திரும்பும்—

எட்டுத் தமிழ்க் கட்சிகளும் முன்வைத்துள்ள யோசனையை ஐ. தே. க., ஸ்ரீ. ல. சு. க. போன்ற பிரதான கட்சிகள் ஏற்றுக்கொண்டால், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன — என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார். (அ-எ-த)

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## கிளிநொச்சி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆசிரியர்கள் தேவை: ஆனால் 668 ஆசிரியர்கள் மட்டுமே தற்சமயம் கடமையாற்றுகிறார்கள்.

கடந்த மார்ச் மாதத்துக்கு பின்னர் இங்கிருந்து 81 ஆசிரியர்கள் வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிக்கு இவ்வருடத்தில் ஆசிரியர்கள் மூவர் மட்டுமே சொந்த விருப்பில் இடமாற்றம் பெற்று வந்துள்ளனர். (த-30)

## தீர்வுக்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரஸ் உட்பட எட்டுத் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக முன்வைத்துள்ளன.

ஆனால் வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்கப்போவதில்லை என்பது பிரதான சிங்களக் கட்சிகளான ஐ. தே. க., ஸ்ரீ. ல. சு. க. உட்பட பெரும்பாலான சிங்களக் கட்சிகளின் நிலைப்பாடாகும்.

இதனிடையில்—

வட. - கிழக்கு இணைப்பை நினைத்துக்கூடப் பார்க்க வேண்டாம் என்று ஜனாதிபதி பிரேமதாஸா தம்மை அண்மையில் சந்தித்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கூறியதாகவும் ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்நிலையில் —

சிங்கள — தமிழ்க் கட்சிகள் ஒன்று கூடி — தெரிவுக்குழு மூலம் — தீர்வு ஒன்றை எட்டுவது இயலாத காரியம் என்று ஏஜென்ஸிச் செய்திகள் சுட்டிக்காட்டின. [உ-10]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org